# ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு

திருவழிப்பாட்டு ஆண்டு C (24-03-2013)

## திருப்பலி முன்னுரை:

திருமகன் இயேசுவின் அன்பு நிறை அருட்தந்தை! (அருட்தந்தையர்களே) அன்பு சகோதரர்களே! சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் வழிபாட்டு ஆண்டின் மிகக் குறிப்பிடத்தக்க தூய நாட்களின் தொடக்க நாளாகிய இன்று தூயவாரத்தின் வாழ்த்துக்களை அன்போடு கூறி மகிழ்கிறேன்.

தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக் இயேசு கிறிஸ்து ஆண்டவர் என எல்லா நாவுமே அறிக்கையிடும்.

இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இயேசு எருசலேம் நகரில் வெற்றியின் அரசராகப் பவனி வந்த நிகழ்வை நாம் அனைவரும் குருத்தோலைகளை ஏந்திநின்று நினைவுகூருகின்றோம். இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு அகியவற்றை நமக்கு நினைவுபடுத்தும் புனித வாரத்தின் தொடக்கமாகவும், நுழைவு வாயிலாகவும் குருத்து ஞாயிறு அமைகின்றது. தாவீதின் மகனுக்கு ஓசான்னா முழக்ககங்களோடும், ஒலிவ கிளைகளை கைகளிலே ஏந்திய வண்ணமாய் எபிரேயர் எருசலேமிற்குள் வீரப்பயணம் மேற்கொள்கிறார்கள். இந்தப் பயணம் தான் இயேசு இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதாகவும், மீட்பின் முதல் படியாகவும் அமைகிறது. பட்டங்களையும், பதவிகளையும் எதிர்பார்த்து இயேசுவின் பின் சென்றால் அவரின் பயணத்தில் நிச்சயம் நமக்கு இடமிருக்காது. இயேசுவைப்போல நாமும் தன்னலப் போர்வையை தகர்த்தும், ஆணவத்தை அழித்தும் இயேசுவின் பின் பயணிப்போம். இயேசுவே உண்மையான அரசர். அவர் தாழ்மையும், ஏழ்மையும் நிறைந்தவர். உண்மையும், நீதியும் அவரிடம் மாத்திரமே உண்டு. கரிசனை, அன்பு, இரக்கம், ஆறுதல், ஆசீர்வாதம், நிறைவு, நிம்மதி என்பன அவர் நமக்குத் தரும் செல்வங்களாகும். எனவே நாமும் இயேசுவே உம்மையே நம்புகின்றோம், இயேசுவே எங்கள் மீட்பர், இயேசுவே ஆண்டவர் என உள்ளத்தாலும், நாவினாலும் விசுவாசத்தோடு எடுத்துரைப்போம். அப்போது இப்புனித வாரம் நம்மை புனிதர்களாக நிச்சயம் மாற்றும் என்ற மனநிலையோடு இத்திருவழிபாட்டில் பங்கெடுப்போம்.

## முதல் வாசகம்:

நிந்தனை செய்வோர்க்கும் காறி உமிழ்வோர்க்கும் என் முகத்தை மறைக்கவில்லை

ஏசாயா நூலிலிருந்து வாசகம் 50:4-7

4 நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்கும் அறிவை நான் பெற்றிட, ஆண்டவராகிய என் தலைவர், கற்றோனின் நாவை எனக்கு அளித்துள்ளார்: காலைதோறும் அவர் என்னைத் தட்டி எழுப்புகின்றார்: கற்போர் கேட்பது போல் நானும் செவிகொடுக்கச் செய்கின்றார்.5 ஆண்டவராகிய என் தலைவர் என் செவியைத் திறந்துள்ளார்: நான் கிளர்ந்தெழவில்லை: விலகிச் செல்லவுமில்லை.6 அடிப்போர்க்கு என் முதுகையும், தாடியைப் பிடுங்குவோாக்கு என் தாடையையும் ஒப்புவித்தேன். நிந்தனை செய்வோர்க்கும் காறி உமிழ்வோர்க்கும் என் முகத்தை மறைக்கவில்லை.7 ஆண்டவராகிய என் தலைவர் துணை நிற்கின்றார்: நான் அவமானம் அடையேன்: என் முகத்தைக் கற்பாறை ஆக்கிக் கொண்டேன்: இழிநிலையை நான் அடைவதில்லை என்றறிவேன்.

**- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**

**- இறைவா உமக்கு நன்றி**

## பதிலுரைப் பாடல்:

**பல்லவி:** என் இறைவா, என் இறைவா, ஏன் என்னை கைவிட்டீர்?

திருப்பாடல்கள் 22:8-9, 17-20, 23-24

8 "ஆண்டவர்மீது நம்பிக்கை வைத்தானே! அவர் இவனை மீட்கட்டும் தாம் அன்பு கூர்ந்த இவனை அவர் விடுவிக்கட்டும்" என்கின்றனர். 9 என்னைக் கருப்பையினின்று வெளிக்கொணர்ந்தவர் நீரே என் தாயிடம் பால்குடிக்கையிலேயே என்னைப் பாதுகாத்தவரும் நீரே! **பல்லவி:**

17 என் எலும்புகளை எல்லாம் நான் எண்ணிவிடலாம் அவர்கள் என்னை முறைத்துப் பார்க்கின்றார்கள். 18 என் ஆடைகளைத் தங்களிடையே பங்கிட்டுக் கொள்கின்றனர் என் உடையின்மேல் சீட்டுப் போடுகின்றனர். 19 நீரோ ஆண்டவரே! என்னை விட்டுத் தொலைவில் போய்விடாதேயும் என் வலிமையே! எனக்குத் துணை செய்ய விரைந்து வாரும். 20 வாளுக்கு இரையாகாதபடி என் உயிரைக் காத்தருளும் இந்த நாய்களின் வெறியினின்று என் ஆருயிரைக் காப்பாற்றும். **பல்லவி:**

23 ஆண்டவருக்கு அஞ்சுவோரே அவரைப் புகழுங்கள் யாக்கோபின் மரபினரே, அனைவரும் அவரை மாட்சிமைப்படுத்துங்கள் இஸ்ரயேல் மரபினரே, அனைவரும் அவரைப் பணியுங்கள். 24 ஏனெனில், எளியோரின் சிறுமையை அவர் அற்பமாக எண்ணவில்லை அதைக் கவனியாமல் இருந்துவிடவில்லை தமது முகத்தை அவர்களுக்கு மறைக்கவுமில்லை தம்மை நோக்கி அவர்கள் மன்றாடுகையில் அவர்களுக்குச் செவிசாய்த்தார். **பல்லவி:**

## இரண்டாம் வாசகம்:

தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்

பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 2:6-11

6 கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை.7 ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி,8 சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்.9 எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.10 ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர்:11 தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக இயேசு கிறிஸ்து ஆண்டவர் என எல்லா நாவுமே அறிக்கையிடும்.

**- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு**

**- இறைவா உமக்கு நன்றி**

நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி

அல்லேலூயா, அல்லேலூயா!அல்லேலூயா

## நற்செய்தி வாசகம்:

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 22:14 - 23:56

14 நேரம் ஆனதும் இயேசு திருத்தூதரோடு பந்தியில் அமர்ந்தார்.15 அப்போது அவர் அவர்களை நோக்கி, “ நான் துன்பங்கள் படுமுன் உங்களோடு இந்தப் பாஸ்கா விருந்தை உண்பதற்கு மிக மிக ஆவலாய் இருந்தேன்.16 ஏனெனில் இறையாட்சியில் இது நிறைவேறும்வரை இதை நான் உண்ணமாட்டேன் என்று உங்களுக்குச் சொல்கிறேன் “ என்றார்.17 பின்பு அவர் கிண்ணத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களிடம், “ இதைப் பெற்று உங்களுக்குள்ளே பகிர்ந்துகொள்ளுங்கள்.18 ஏனெனில், இது முதல் இறையாட்சி வரும்வரை, திராட்சைப் பழ இரசத்தைக் குடிப்பதில்லை என நான் உங்களுக்குச் சொல்கிறேன் “ என்றார்.19 பின்பு அவர் அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து, “ இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள் “ என்றார்.20 அப்படியே உணவு அருந்திய பின்பு அவர் கிண்ணத்தை எடுத்து, “ இந்தக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற எனது இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை.21 என்னைக் காட்டிக்கொடுப்பவன் இதோ, என்னோடு பந்தியில் அமர்ந்திருக்கிறான்.22 மானிடமகன் தமக்கென்று குறிக்கப்பட்டபடியே போகிறார், ஆனால் ஐயோ! அவரைக் காட்டிக்கொடுக்கிறவனுக்குக் கேடு “ என்றார்.23 அப்பொழுது அவர்கள், “ நம்மில் இச்செயலைச் செய்யப் போகிறவர் யார் “ என்று தங்களுக்குள்ளே கேட்கத் தொடங்கினார்கள்.

24 மேலும் தங்களுக்குள்ளே பெரியவராக எண்ணப்பட வேண்டியவர் யார் என்ற
விவாதம் அவர்களிடையே எழுந்தது.25 இயேசு அவர்களிடம், “ பிற இனத்தவரின்
அரசர்கள் மக்களை அடக்கி ஆளுகின்றார்கள் அதிகாரம் காட்டுகின்றவர்கள் நன்மை
செய்பவர்கள் என அழைக்கப்படுகின்றார்கள்.26 ஆனால் நீங்கள் அப்படிச் செய்யலாகாது.
உங்களுள் பெரியவர் சிறியவராகவும் ஆட்சிபுரிபவர் தொண்டு புரிபவராகவும் மாற
வேண்டும்.27 யார் பெரியவர்? பந்தியில் அமர்ந்திருப்பவரா? அல்லது பணிவிடை புரிபவரா?
பந்தியில் அமர்ந்திருப்பவர் அல்லவா? நான் உங்கள் நடுவே பணிவிடை புரிபவனாக
இருக்கிறேன்.28 நான் சோதிக்கப்படும்போது என்னோடு இருந்தவர்கள் நீங்களே.29 என்
தந்தை எனக்கு ஆட்சியுரிமை கொடுத்திருப்பது போல நானும் உங்களுக்குக்
கொடுக்கிறேன்.30 ஆகவே என் ஆட்சி வரும்போது நீங்கள் என்னோடு பந்தியில் அமர்ந்து
உண்டு குடிப்பீர்கள் இஸ்ரயேலின் பன்னிரு குலத்தவருக்கும் தீர்ப்பு வழங்க அரியணையில்
அமர்வீர்கள்.

31 “ சீமோனே, சீமோனே, இதோ கோதுமையைப்போல் உங்களைப் புடைக்கச் சாத்தான்
அனுமதி கேட்டிருக்கிறான்.32 ஆனால் நான் உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக
மன்றாடினேன். நீ மனந்திரும்பியபின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து “ என்றார்.33
அதற்கு பேதுரு, “ ஆண்டவரே, உம்மோடு சிறையிடப்படுவதற்கும் ஏன், சாவதற்கும்
நான் ஆயத்தமாய் உள்ளேன் “ என்றார்.34 இயேசு அவரிடம், “ பேதுருவே, இன்றிரவு,
? என்னைத் தெரியாது ? என மும்முறை நீ மறுதலிக்குமுன் சேவல் கூவாது என
உனக்குச் சொல்கிறேன் “ என்றார்.35 இயேசு சீடர்களிடம், “ நான் உங்களைப்
பணப்பையோ வேறுபையோ மிதியடியோ எதுவுமில்லாமல் அனுப்பியபோது, உங்களுக்கு
ஏதாவது குறை இருந்ததா? “ என்று கேட்டார். அவர்கள், “ ஒரு குறையும் இருந்ததில்லை
“ என்றார்கள்.36 அவர் அவர்களிடம், “ ஆனால், இப்பொழுது பணப்பை உடையவர்
அதை எடுத்துக் கொள்ளட்டும் வேறு பை உடையவரும் அவ்வாறே செய்யட்டும். வாள்
இல்லாதவர் தம் மேலுடையை விற்று வாள் வாங்கிக் கொள்ளட்டும்.37 ஏனெனில் நான்
உங்களுக்குச் சொல்கிறேன்: “ கொடியவருள் ஒருவராகக் கருதப்பட்டார் “ என்று
மறைநூலில் எழுதப்பட்டுள்ளது என் வாழ்வில் நிறைவேற வேண்டும். என்னைப் பற்றியவை
எல்லாம் நிறைவேறி வருகின்றன “ என்றார்.38 அவர்கள் “ ஆண்டவரே, இதோ! இங்கே
இரு வாள்கள் உள்ளன “ என்றார்கள். இயேசு அவர்களிடம், “ போதும் “ என்றார்.

39 இயேசு அங்கிருந்து புறப்பட்டுத் தம் வழக்கப்படி ஒலிவ மலைக்குச் சென்றார்.
சீடர்களும் அவரைப் பின் தொடர்ந்தார்கள்.40 அந்த இடத்தை அடைந்ததும் அவர்
அவர்களிடம், “ சோதனைக்கு உட்படாதிருக்க இறைவனிடம் வேண்டுங்கள், “ என்றார்.41
பிறகு அவர் அவர்களை விட்டுக் கல்லெறிதூரம் விலகிச் சென்று, முழந்தாள்படியிட்டு,

இறைவனிடம் வேண்டினார்42 “ தந்தையே, உமக்கு விருப்பமானால் இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும். ஆனாலும் என் விருப்பப்படி அல்ல் உம் விருப்பப்படியே நிகழட்டும் “ என்று கூறினார்.43 (அப்போது விண்ணகத்திலிருந்து ஒரு தூதர் அவருக்குத் தோன்றி அவரை வலுப்படுத்தினார்.44 அவரோ மிகுந்த வேதனைக்குள்ளாகவே, உருக்கமாய் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார். அவரது வியர்வை பெரும் இரத்தத் துளிகளைப் போலத் தரையில் விழுந்தது.)45 அவர் இறைவேண்டலை முடித்துவிட்டு எழுந்து சீடர்களிடம் வந்தபோது அவர்கள் துயரத்தால் சோர்வுற்றுத் தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டார்.46 அவர்களிடம், “ என்ன, உறங்கிக் கொண்டா இருக்கிறீர்கள்? சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள் “ என்றார்.

47 இயேசு தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, இதோ! மக்கள் கூட்டமாய் வந்தனர். பன்னிருவருள் ஒருவனான யூதாசு என்பவன் அவர்களுக்குமுன் வந்து அவரை முத்தமிட நெருங்கினான்.48 இயேசு அவனிடம், “ யூதாசே, முத்தமிட்டா மானிட மகனைக் காட்டிக் கொடுக்கப் போகிறாய்? “ என்றார்.49 அவரைச் சூழ நின்றவர்கள் நிகழப்போவதை உணர்ந்து, “ ஆண்டவரே, வாளால் வெட்டலாமா? “ என்று கேட்டார்கள்.50 அப்பொழுது அவர்களுள் ஒருவர் தலைமைக் குருவின் பணியாளரைத் தாக்கி அவருடைய வலக் காதைத் துண்டித்தார்.51 இயேசு அவர்களைப் பார்த்து, “ விடுங்கள், போதும் “ என்று கூறி அவருடைய காதைத் தொட்டு நலமாக்கினார்.52 அவர் தம்மிடம் வந்த தலைமைக் குருக்களையும் கோவில் காவல் தலைவர்களையும் மூப்பர்களையும் பார்த்து, “ ஒரு கள்வனைப் பிடிக்க வருவதுபோல நீங்கள் வாள்களோடும், தடிகளோடும் வந்தது ஏன்?53 நான் நாள்தோறும் கோவிலில் உங்களோடு இருந்தும் நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே. ஆனால் இது உங்களுடைய நேரம் இப்போது இருள் அதிகாரம் செலுத்துகிறது “ என்றார்.54 பின்னர் அவர்கள் இயேசுவைக் கைதுசெய்து இழுத்துச் சென்று தலைமைக் குருவின் வீட்டுக்குக் கொண்டு போனார்கள். பேதுரு தொலையில் அவரைப் பின்தொடர்ந்தார்.55 வீட்டு உள்முற்றத்தின் நடுவில் நெருப்பு மூட்டி, அதைச் சுற்றி அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். பேதுருவும் அவர்களோடு இருந்தார்.56 அப்போது பணிப்பெண் ஒருவர் நெருப்பின் அருகில் அவர் அமர்ந்திருப்பதைக் கண்டு, அவரை உற்றுப்பார்த்து, “ இவனும் அவனோடு இருந்தவன் “ என்றார்.57 அவரோ, “ அம்மா, அவரை எனக்குத் தெரியாது “ என்று மறுதலித்தார்.58 சிறிது நேரத்திற்குப்பின் அவரைக் கண்ட வேறு ஒருவர், “ நீயும் அவர்களைச் சேர்ந்தவன்தான் “ என்றார். பேதுரு, “ இல்லையப்பா “ என்றார்.59 ஏறக்குறைய ஒரு மணிநேரத்திற்குப்பின்பு மற்றொருவர், “ உண்மையாகவே இவனும் அவனோடு இருந்தான் இவனும் கலிலேயன்தான் “ என்று வலியுறுத்திக் கூறினார்.60 பேதுருவோ, “ நீர் குறிப்பிடுபவரை எனக்குத் தெரியாது “

என்றார். உடனேயே, அவர் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தபோதே, சேவல் கூவிற்று.61 ஆண்டவர் திரும்பி, பேதுருவைக் கூர்ந்து நோக்கினார் “ இன்று சேவல் கூவு முன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய் “ என்று ஆண்டவர் தமக்குக் கூறியதைப் பேதுரு நினைவுகூர்ந்து,62 வெளியே சென்று மனம் நொந்து அழுதார்.

63 இயேசுவைப் பிடித்துவைத்திருந்தவர்கள் அவரை ஏளனம் செய்து நையப்புடைத்தார்கள்.64 அவரது முகத்தை மூடி, “ உன்னை அடித்தவர் யார்? இறைவாக்கினனே, சொல் “ என்று கேட்டார்கள்.65 இன்னும் பலவாறு அவரைப் பழித்துரைத்தார்கள்.66 பொழுது விடிந்ததும் மக்களின் மூப்பர்களும் தலைமைக்குருக்களும் மறைநூல் அறிஞர்களும் கூடிவந்தார்கள் இயேசுவை இழுத்துச் சென்று தங்கள் மூப்பர் சங்கத்தின்முன் நிறுத்தினார்கள்.67 அவர்கள், “ நீ மெசியா தானா? எங்களிடம் சொல் “ என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம், “ நான் உங்களிடம் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள்68 நான் உங்களிடம் கேட்டாலும் பதில் சொல்ல மாட்டீர்கள்.69 இதுமுதல் மானிடமகன் வல்லவராம் கடவுளின் வலப்புறத்தில் வீற்றிருப்பார் “ என்றார்.70 அதற்கு அவர்கள் அனைவரும், “ அப்படியானால் நீ இறைமகனா? “ என்று கேட்டனர். அவரோ, “ நான் இறைமகன் என நீங்களே சொல்லுகிறீர்கள் “ என்று அவர்களுக்குச் சொன்னார்.71 அதற்கு அவர்கள், “ இன்னும் நமக்குச் சான்றுகள் தேவையா? இவன் வாயிலிருந்து நாமே கேட்டோமே “ என்றார்கள்.

1 திரண்டிருந்த மக்கள் அனைவரும் எழுந்து இயேசுவைப் பிலாத்தின்முன் கொண்டு சென்றனர்.2 “ இவன் நம் மக்கள் சீரழியக் காரணமாக இருக்கிறான் சீசருக்குக் கப்பம் கட்டக்கூடாது என்கிறான் தானே மெசியாவாகிய அரசன் என்று சொல்லிக் கொள்கிறான். இவற்றையெல்லாம் நாங்களே கேட்டோம் “ என்று அவர்கள் இயேசுவின் மேல் குற்றம் சுமத்தத் தொடங்கினார்கள்.3 பிலாத்து அவரை நோக்கி, “ நீ யூதரின் அரசனா? “ என்று கேட்க, அவர், “ அவ்வாறு நீர் சொல்கிறீர் “ என்று பதில் கூறினார்.4 பிலாத்து தலைமைக் குருக்களையும் மக்கள் கூட்டத்தையும் பார்த்து, “ இவனிடம் நான் குற்றம் ஒன்றும் காணவில்லை “ என்று கூறினான்.5 ஆனால் அவர்கள், “ இவன் கலிலேயா தொடங்கி யூதேயா வரை இவ்விடம் முழுவதிலும் மக்களுக்குக் கற்பித்து அவர்களைத் தூண்டிவிடுகிறான் “ என்று வலியுறுத்திக் கூறினார்கள்.

6 இதைக் கேட்ட பிலாத்து, “ இவன் கலிலேயனா? “ என்று கேட்டான்7 அவர் ஏரோதுவின் அதிகாரத்திற்கு உட்பட்டவர் என்று அவன் அறிந்து, அப்போது எருசலேமிலிருந்த ஏரோதிடம் அவரை அனுப்பினான்.8 இயேசுவைக் கண்ட ஏரோது மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான் ஏனெனில், அவரைக் குறித்துக் கேள்விப்பட்டு அவரைக்

காண நெடுங்காலமாய் விருப்பமாய் இருந்தான் அவர் அரும் அடையாளம் ஏதாவது செய்வதைக் காணலாம் என்றும் நெடுங்காலமாய் எதிர்பார்த்திருந்தான்.9 அவன் அவரிடம் பல கேள்விகள் கேட்டான். ஆனால் அவர் அவனுக்குப் பதில் எதுவும் கூறவில்லை.10 அங்கு நின்ற தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞர்களும் அவர்மேல் மிகுதியான குற்றம் சுமத்திக் கொண்டிருந்தார்கள்.11 ஏரோது தன் படைவீரரோடு அவரை இகழ்ந்து ஏளனம் செய்து, பளபளப்பான ஆடையை அவருக்கு உடுத்தி அவரைப் பிலாத்திடம் திருப்பி அனுப்பினான்.12 அதுவரை ஒருவருக்கு ஒருவர் பகைவராய் இருந்த ஏரோதும் பிலாத்தும் அன்று நண்பர்களாயினர்.

13 பிலாத்து தலைமைக் குருக்களையும் ஆட்சியாளர்களையும் மக்களையும் ஒன்றாக வரவழைத்தான்.14 அவர்களை நோக்கி, " மக்கள் சீரழியக் காரணமாய் இருக்கிறான் என்று இவனை என்னிடம் கொண்டு வந்தீர்களே் இதோ, நான் உங்கள் முன்னிலையில் விசாரித்தும் நீங்கள் சுமத்துகிற எந்தக் குற்றத்தையும் இவனிடத்தில் காணவில்லை.15 ஏரோதும் குற்றம் எதுவும் காணவில்லை ஆகவே, அவர் இவனை நம்மிடம் திருப்பி அனுப்பியுள்ளார். மரண தண்டனைக்குரிய யாதொன்றையும் இவன் செய்யவில்லை என்பது தெளிவு.16 எனவே இவனைத் தண்டித்து விடுதலை செய்வேன் " என்றான்.17 (விழாவின்போது அவர்களுக்கென ஒரு கைதியை விடுவிக்க வேண்டிய கட்டாயம் அவனுக்கு இருந்தது.)18 திரண்டிருந்த மக்கள் அனைவரும், " இவன் ஒழிக! பரபாவை எங்களுக்கென விடுதலை செய்யும் " என்று கத்தினர்.19 பரபா நகரில் நடந்த ஒரு கலகத்தில் ஈடுபட்டுக் கொலை செய்ததற்காகச் சிறையிலிடப்பட்டவன்.20 பிலாத்து இயேசுவை விடுதலை செய்ய விரும்பி மீண்டும் அவர்களைக் கூப்பிட்டுப் பேசினான்.21 ஆனால் அவர்கள், " அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் " என்று கத்தினார்கள்.22 மூன்றாம் முறையாக அவன் அவர்களை நோக்கி, " இவன் செய்த குற்றம் என்ன? மரண தண்டனைக்குரிய குற்றம் ஒன்றும் இவனிடம் நான் காணவில்லை. எனவே இவனைத் தண்டித்து விடுதலை செய்வேன் " என்றான்.23 அவர்கள் அவரைச் சிலுவையில் அறைய வேண்டுமென்று உரத்த குரலில் வற்புறுத்திக் கேட்டார்கள். அவர்கள் குரலே வென்றது.24 அவர்கள் கேட்டபடியே பிலாத்து தீர்ப்பு அளித்தான்.25 கலகத்தில் ஈடுபட்டு, கொலை செய்ததற்காகச் சிறையிலிடப்பட்டிருந்தவனை அவர்கள் கேட்டுக் கொண்டபடியே அவன் விடுதலை செய்தான் இயேசுவை அவர்கள் விருப்பப்படி செய்ய விட்டுவிட்டான்.

26 அவர்கள் இயேசுவை இழுத்துச் சென்றுகொண்டிருந்தபோது சிரேன் ஊரைச்சேர்ந்த சீமோன் என்பவர் வயல்வெளியிலிருந்து வந்துகொண்டிருந்தார். அவர்கள் அவரைப் பிடித்து அவர்மேல் இயேசுவின் சிலுவையை வைத்து, அவருக்குப்பின் அதைச் சுமந்து

கொண்டுபோகச் செய்தார்கள்.27 பெருந்திரளான மக்களும் அவருக்காக மாரடித்துப் புலம்பி ஒப்பாரி வைத்த பெண்களும் அவர் பின்னே சென்றார்கள்.28 இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி, “ எருசலேம் மகளிரே, நீங்கள் எனக்காக அழவேண்டாம் மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள்.29 ஏனெனில் இதோ, ஒரு காலம் வரும். அப்போது “ மலடிகள் பேறுபெற்றோர் “ என்றும் “ பிள்ளை பெறாதோரும் பால் கொடாதோரும் பேறு பெற்றோர் “ என்றும் சொல்வார்கள்.30 அப்போது அவர்கள் மலைகளைப் பார்த்து, “ எங்கள் மேல் விழுங்கள் “ எனவும் குன்றுகளைப் பார்த்து, “ எங்களை மூடிக்கொள்ளுங்கள் “ எனவும் சொல்வார்கள்.31 பச்சை மரத்துக்கே இவ்வாறு செய்கிறார்கள் என்றால் பட்ட மரத்துக்கு என்னதான் செய்யமாட்டார்கள்! “ என்றார்.32 வேறு இரண்டு குற்றவாளிகளையும் மரணதண்டனைக்காக அவர்கள் அவரோடு கொண்டுசென்றார்கள்.33 மண்டை ஓடு எனப்படும் இடத்திற்கு வந்ததும் அங்கே அவரையும் வலப்புறம் ஒருவனும் இடப்புறம் ஒருவனுமாக அக்குற்றவாளிகளையும் அவர்கள் சிலுவைகளில் அறைந்தார்கள்.34 அப்போது (இயேசு, “தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை“ என்று சொன்னார். ) அவர்கள் அவருடைய ஆடைகளைக் குலுக்கல் முறையில் பங்கிட்டுக் கொண்டார்கள்.35 மக்கள் இவற்றைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். ஆட்சியாளர்கள், “ பிறரை விடுவித்தான் இவன் கடவுளின் மெசியாவும், தேர்ந்தெடுக்கப்பட்டவனுமானால் தன்னையே விடுவித்துக் கொள்ளட்டும் “ என்று கேலிசெய்தார்கள்.36 படைவீரர் அவரிடம் வந்து புளித்த திராட்சை இரசத்தைக் கொடுத்து,37 “ நீ யூதர்களின் அரசனானால் உன்னைக் காப்பாற்றிக் கொள் “ என்று எள்ளி நகையாடினர்.38 “ இவன் யூதரின் அரசன் “ என்று அவரது சிலுவையின் மேல் எழுதி வைக்கப்பட்டிருந்தது.39 சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன், “ நீ மெசியாதானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று “ என்று அவரைப் பழித்துரைத்தான்.40 ஆனால் மற்றவன் அவனைக் கடிந்து கொண்டு, “ கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா? நீயும் அதே தீர்ப்புக்குத்தானே உள்ளாகி இருக்கிறாய்.41 நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கேற்ற தண்டனையை நாம் பெறுகிறோம். இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே! “ என்று பதிலுரைத்தான்.42 பின்பு அவன், “ இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும் “ என்றான்.43 அதற்கு இயேசு அவனிடம், “ நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன் “ என்றார்.44 ஏறக்குறைய நண்பகல் பன்னிரண்டு மணி முதல் பிற்பகல் மூன்று மணிவரை நாடெங்கும் இருள் உண்டாயிற்று.45 கதிரவன் ஒளி கொடுக்கவில்லை. திருக்கோவிலின் திரை நடுவில் கிழிந்தது.46 “ தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன் “ என்று இயேசு உரத்த குரலில் கூறி உயிர் துறந்தார்.47 இதைக் கண்ட நூற்றுவர் தலைவர், “ இவர் உண்மையாகவே நேர்மையாளர்

“ என்று கூறிக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார்.48 இக்காட்சியைக் காணக் கூடிவந்திருந்த மக்கள் அனைவரும் நிகழ்ந்தவற்றைக் கண்டு, மார்பில் அடித்துக் கொண்டு திரும்பிச் சென்றனர்.49 அவருக்கு அறிமுகமான அனைவரும், கலிலேயாவிலிருந்து அவரைப் பின்பற்றி வந்திருந்த பெண்களும் தொலையிலிருந்து இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

50 யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் தலைமைச் சங்க உறுப்பினர், நல்லவர், நேர்மையாளர்.51 தலைமைச் சங்கத்தாரின் திட்டத்துக்கும் செயலுக்கும் இணங்காத அவர் யூதேயாவிலுள்ள அரிமத்தியா ஊரைச் சேர்ந்தவர் இறையாட்சியின் வருகைக்காகக் காத்திருந்தவர்.52 அவர் பிலாத்திடம் போய் இயேசுவின் உடலைக் கேட்டார்.53 அவர் அவரது உடலை இறக்கி, மெல்லிய துணியால் சுற்றிப் பாறையில் குடைந்திருந்த கல்லறையில் வைத்தார். அதற்கு முன்பு யாரையும் அதில் அடக்கம் செய்ததில்லை.54 அன்று ஆயத்த நாள் ஓய்வுநாளின் தொடக்கம்.55 கலிலேயாவிலிருந்து அவரோடு வந்திருந்த பெண்கள் பின்தொடர்ந்து சென்று கல்லறையைக் கண்டார்கள் அவருடைய உடலை வைத்த விதத்தைப் பார்த்து விட்டு,56 திரும்பிப் போய் நறுமணப் பொருள்களையும் நறுமணத் தைலத்தையும் ஆயத்தம் செய்தார்கள். கட்டளைப்படி, அவர்கள் ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்.

**- இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**

**- கிறிஸ்துவே உமக்கு புகழ்.**

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

இப்பொழுதாவது உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்' ஏனெனில் நான் அருள் நிறைந்தவர், இரக்கம் மிக்கவர்: என்கிறார் ஆண்டவர்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

நிலைவாழ்வு தருபவராம் இறைவா,

உம்மில் நம்பிக்கை கொண்டு, உமது திருமகனின் அரசை உலகெங்கும் நிறுவ உழைத்து வருகின்ற திருச்சபையின் திருத்தந்தை, முதலாம் பிரான்சிஸ் ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவருக்கும் நிலைவாழ்வைப் பரிசளிக்க வேண்டுமென்று உம்மைப் பணிந்து மன்றாடுகிறோம்.

அன்புத் தந்தையே இறைவா!

உமது திருநாமத்தில் திருமுழுக்குப் பெற்றுள்ள நாங்கள் அனைவரும் எம்முடைய வாழ்வாலும், வார்த்தையாலும் உம்மை மகிமைப்படுத்தி: இறையுறவிலும், ஒழுக்கத்திலும் , ஞானத்திலும், சமூக உறவிலும் சிறந்து விளங்கி உமக்குகந்த மக்களாக சாட்சிய வாழ்வு வாழவும், அமைதியின் தூதுவர்களாகச்,செயற்படவும், உமது பாடுகள், மரணம், உயிர்ப்பு அகியவற்றின் செய்திகளை ஏற்று புனித வாழ்வு வாழ எம்மை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக என்ற ஆசீரோடு குடும்ப உறவை உருவாக்கிய அன்புத் தந்தையே இறைவா!

எமது குடும்பங்களுக்காக உம்மிடம் வருகின்றோம். இன்றைய நாட்களில் குடும்ப உறவுக்கும் ஒற்றுமைக்கும் மகிழ்ச்சிக்கும் தடையாக இருக்கும் அனைத்துத் தீமைகளையும் உமது இரக்கத்தால் தகர்த்தெறிந்து குடும்பங்களில் அமைதியும் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் நிலவ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

போராட அழைப்பவராம் இறைவா,

பணிவிடை செய்ய நாம் தயங்கலாகாது, என்பதை எடுத்துரைக்கத்தான் யேசு அன்று தன்னைத் தானே தாழ்த்திக்கொண்டு தன்னுடைய சீடர்களுக்கு பணிவிடை செய்தார். நாம் ஒவ்வொருவரும் நம்முடைய நண்பர்களுக்கு, நம்முடைய உறவினர்களுக்கு ஏன் நம்முடைய எதிரிகளுக்கும் கூட பணிவிடை செய்து, வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

அன்புத் தந்தையே இறைவா!

நீர் எமக்குக் கொடுத்துள்ள மக்கள் செல்வங்களுக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். அவர்கள் இதுவே தகுந்த காலம், இன்றே மீட்பின் நாள் என்னும் இறைவெளிப்பாட்டை தம் உள்ளத்தில் ஆழமாகப் பதித்து: இக்காலத்தை உம்மையே தேடி நேசிப்பதிலும், உமது வார்த்தைக்கு ஆர்வத்துடன் செவிமடுத்து வாழுவதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தவும் உமக்குகந்த பிள்ளைகளாக வாழவும், செயற்படவும் அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

# இன்றைய சிந்தனை:

## ”சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்”

இந்த குருத்து ஞாயிறு நமக்கு உணர்த்தும் செய்தி, நாம் அனைவரும் எருசலேமுள் நுழைவதற்கு தயாராக இருக்க வேண்டும் என்பதே. “எருசலேம்“ என்பது இறைவன் வாழும் இடம். கடவுளின் மாட்சியும் மகிமையும் தங்கியுள்ள இடம். எருசலேம் தேவாலயம் இதற்குச் சான்று. இந்த எருசலேமுள் நுழைவதைத் தன் இலக்காக, இலட்சியமாக இயேசு கொண்டிருந்தார்.காண்க: லூக் 9:51 13:22 13:34 17:11 18:31 18:35 19:1 19:11 19:28 19:41 19:45 எருசலேம் நோக்கி இயேசு பயணம் தொடங்கிய நேரம் முதல், எருசலேமில் நுழைந்த பொழுதும், அதன்பின் அங்கு நிகழ்ந்த ஒவ்வொரு நிகழச்சியும் இதயத்திற்கு இதமானது அல்ல. ஆனால் இலட்சிய வாழ்வு வாழும் எவருடைய வாழ்வும் இப்படித்தான் இருக்கும். கசப்பானதாக, கடினமானதாக ஆனாலும் ஒரு இனிய சுவை கொண்டதாக இருக்கும். முள்ளில் ரோஜாவாக இருக்கும். வெற்றியும் தோல்வியும் கலந்த ஒரு அனுபவம். குருத்து ஞாயிறு இந்த இரு வேறுநிலைகளையும் நமக்கு உணர்த்துகிறது. தோல்வியில் நம்பிக்கையையும் வெற்றியில் நிதானத்தையும் சமன் செய்து வாழ உணர்த்துகிறது.அர்ப்பணவாழ்வில், இலட்சிய பயணத்தில் வேதனையும் விரக்தியும் விமர்சனமும் நம் வாழ்க்கையை விகாரப்படுத்திவிடலாம். குருத்து வெளிப்படுத்தும் இளமை, புதுமை, செழுமை இங்கு நம்பிக்கை உரம் ஊட்டும் என்பதாலே இயேசு இதை அனுமதிக்கிறார். உண்மைக்குச் சான்று பகரும் உன் சாட்சிய வாழ்வில், கும்பலே வெல்லும், கூக்குரலே ஜெயிக்கும் என்பதாலே குருத்து ஞாயிறு பயணத்தில் “ஓசான்னா“ கோஷத்திற்கு அனுமதியளிக்கிறார். தலைமையேற்று நடத்தும் உன் பணிவாழ்வில்,உன் சொத்து சுகம், பொன் பொருள் அனைத்தையும் இழக்க வேண்டும் என்பதாலே, இன்று ஒரு கழுதை வாகனத்திற்குச் சம்மதிக்கிறார். அதே பணிவாழ்வில், உன் மானம் மரியாதை உறியப்படும் என்பதாலே, குருத்து ஞாயிறு பயணத்தில் மேலுடைகளை கழுதையின் மேலும், வழியிலும் விரிப்பதற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது. இந்த குருத்து ஞாயிறு தந்த உயிர்ப்பின் நம்பிக்கையில் பெரிய வெள்ளியைச் சந்திக்கும் வலிமையைப் பெற்றார்.

## மன்றாட்டு:

இறைவா, குருத்து ஞாயிறைக் கொண்டாடும் நாம், வாழ்வின் பெரிய வெள்ளிகளை வலிமையோடு சந்திக்க அருள்தாரும்.